பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 சிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர் : 16] சென்னை : புரட்டாசி 24 (10—10—68) வியாழன் ★ வெளியூர் : புரட்டாசி 25 (11—10—68) வெள்ளி [இதழ் : 95

மலிவு விலையில் பால்

சென்னை நகரில் விற்க அரசு ஏற்பாடு

சென்னை, அக். 10—

சென்னை நகரில், குறைந்த வருமானக்காரர்களுக்காக ஏடு எடுத்த பால் ('டோன்டு மில்க்') நாளை முதல் விற்கப்படும்.

நாள் ஒன்றுக்கு 2,000 லிட்டர் பால் 4,000 பேருக்கு விற்கப்படும்; படிப்படியாக 10,000 பேருக்கு விரிவுபடுத்தப்படும்.

லிட்டர் ஒன்றுக்கு 72 காசு (அதாவது ஒரு புட்டி -- அரை லிட்டர் -- 36 காசு) வீதம் விற்கப்படும்.

இறுதி எச்சரிக்கையை ஏற்பீர்!

தியாகத்தால் வளர்ந்த கழகத்துக்குத் துரோகம் வேண்டாம்

அமைச்சர் கருணாநிதி உருக்கமான வேண்டுகோள்

சென்னை, அக். 10—

"மாநகராட்சித் தேர்தலில் எழுபத்தெட்டு இடங்களுக்குமேல் கழகத்துக்குக் கிடைக்கும்" என்று பொதுப் பணி அமைச்சர் திரு. கருணாநிதி நம்பிக்கை தெரிவித்தார்.

"கழகத்தின் அதிகாரபூர்வமான வேட்பாளர் வெற்றி பெறக் கழகத் தொண்டர்கள் எப்போதும்போல் சுழன்று வேலை செய்யவேண்டும்" எனக் கேட்டுக்கொண்டார்.

அதிகாரபூர்வமான கழக வேட்பாளரின் வெற்றிக்குக் குந்தகம் விளையும் வகையில் செயல்பட முனையும் கழகத் தோழர்கட்கு இறுதி எச்சரிக்கை விடுத்தார்; உடனடியாகத் திருத்திக்கொள்ளுமாறும், கழக வெற்றிக்குப் பாடுபடுமாறும் வேண்டுகோள் விடுத்தார்.

சென்னை 78-வது வட்ட தி.மு.க. தேர்தல் அலுவலகத்தைத் திறந்து வைத்து அமைச்சர் கருணாநிதி பேசினார்.

அமைப்புச் செயலாளர் திரு. என். வி. நடராசன் எம். எல். சி. அவர்கள் கழகக் கொடியை ஏற்றி வைத்துப் பேசினார்.

விழாவுக்கு என். எஸ். நடராசன் தலைமைவகித்தார்.

மாவட்டச் செயலாளர் நீலநாராயணன், வழக்கறிஞர் கே. ஏ. கிருட்டிணசாமி, சிட்டிபாபு எம்.பி. ஆகியோரும் பேசினர்.

அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள் பேசியதாவது :—

"நம் கழகத்தின் இருவண்ணக் கொடி இங்கே ஏற்றி வைக்கப்பட்டது; அந்தக் கொடி நிழலில்தான் நாம் நமது கழகத்தைக் கட்டிக் காத்து வந்திருக்கிறோம்!

எத்தனையோ ஏழை எளியவர்களின் இரத்தத்தில் தோய்த்து எடுக்கப்பட்டு வண்ணம் பூசப்பட்டது -- கொடியில் உள்ள செந்நிறம்!

இந்தக் கொடி ஏற்றிய கம்பத்தைக் காத்திடத் தங்கள் இன்னுயிர் ஈந்தோர் பலர்! தங்கள் நரம்புகளையே இக்கொடியினைக் கட்டுவதற்கான கயிறாகத் தந்தோர் பலர்! தோழர்கள் சந்தித்த கொடுமைகள் பல! சிறைச்சாலைகளையும் இன்முகத்தோடு ஏற்றனர்!

பழைய காங்கிரசு ஆட்சி செய்த கொடுமைகளை ஏற்று இன்று ஆட்சிபீடத்தைப் பிடித்துள்ளோம்!

அதற்குமுன், 1959-முதல் மாநகராட்சியில் கழகம் பொறுப்பேற்றது என்பதெல்லாம், எல்லோரும் அறிந்த பேருண்மை!

'இந்தத் தடவை எப்படியாவது மாநகராட்சியைப் பிடித்துவிட வேண்டும்' என்று காங்கிரசுக் கட்சி துடியாய்த் துடிக்கிறது!

மாநகராட்சியைப் பிடித்து -- பின், 1972-ல் நடக்கக்கூடிய பொதுத் தேர்தலில் மீண்டும் ஆளும் கட்சியாகி -- இன்று அவர்களை சும்மாவிட்டுள்ள நம்மையெல்லாம் பழி வாங்க வேண்டுமென்று அவர்கள் துடியாய்த் துடிக்கிறார்கள்!

1959-ல் மாநகராட்சி மன்றத்தைக் கழகம் கைப்பற்றிய பிறகுதான், காங்கிரசு கொஞ்சம் கொஞ்சமாகச் சரிந்தது! தமிழ்நாட்டின் கோட்டை நம் கைக்கு வந்தது!

இதே கணக்கைத் திரும்பத் திரும்பப் போட்டுக்கொண்டு தேர்தல் களத்தில் குதித்துள்ளது காங்கிரசு!

இம்மாநகரில் அடுத்து வரப் போகிற மேயர், கழக மேயராகத்தான் இருப்பார் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை!

அங்கொன்றும் இங்கொன்றுமாக சில வட்டங்களில் முரண்பட்ட நிலைகள் தெரிவது பற்றி நண்பர்கள் பேசினார்கள்; ஒரு வளர்ந்த கட்சியில் இத்தகைய முரண்பாடு ஏற்படக்கூடும்!

கழகக் கொடிக்கும் கழகத்துக்கும் மறந்தும் துரோகம் செய்வோர், நிச்சயமாக அண்ணாவின் தம்பியாக இருக்க முடியாது!

'அண்ணாவுக்கும் தம்பி -- அவர் நிறுத்துகின்றவரைத் தோற்கடிப்பதிலும் தம்பி' என்றால் அத்தகையோர் ஒருநாளும் மன்னிக்கப்படமாட்டார்கள்!

தேர்தல் நேரத்தில் பம்பரம் போல் சுழன்று தமிழ்நாட்டின் பட்டிதொட்டியெல்லாம் ஓடிப் பணியாற்றிய அண்ணன் நோய்வாய்ப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் நேரத்தில், யாராவது அவருக்குத் துரோகம் நினைத்தால், பொட்டுப் பூச்சிகளாக --- புன்மைத் தேரைகளாகத் தூக்கி எறியப்படுவார்கள்.

கழகத் தோழர்களாகிய நீங்கள் கட்டுக்கோப்புக் குலையாமல் என்றும்போல உறுதியாகப் பணிபுரியுங்கள்!

எங்கள் வேண்டுகோளுக்கிணங்கப் பல தோழர்கள், கழகத்தின் கட்டுக்கோப்பை உணர்ந்து தங்களது வேட்புமனுக்களை எல்லாம் திரும்பப் பெற்றிருக்கிறார்கள்.

அதேபோல், நான் கடைசி வேண்டுகோள் விடுகிறேன் — நீங்கள் எங்கள் இரத்தத்தின் இரத்தமாய்--சதையின் சதையாய் — உண்மையான பாசத்தோடு இருந்தது செய்யானால், அண்ணாவுக்கும் — கழகத்துக்கும் துரோகம் செய்யாமல், கழக வெற்றிக்குப் பாடுபட வாரீர், வாரீர் என அழைக்கிறேன்."

ரூ. 3 லட்சம் மதிப்புள்ள கள்ளக் கடத்தல் பொருள்கள்

சுங்க இலாகா அதிகாரிகள் கைப்பற்றினர்

சிதம்பரத்திற்கு அருகிலுள்ள மேலத் திருசுழிப்பாலை கிராமத்தில் சுங்க இலாகா அதிகாரிகள், 102 மூட்டை இலவங்கத்தையும் (கிராம்பு), 6 பெட்டி யீஸ்ட் மாத்திரைகளையும் கைப்பற்றியுள்ளனர்.

இவற்றின் மதிப்பு ரூ 3 இலட்சம் இருக்குமாம்.

வெளிநாட்டிலிருந்து இவைகள் தமிழகத்திற்குக் கள்ளத்தனமாகக் கடத்திவரப்பட்டதாகத் தெரிய வருகிறது.

மாநகராட்சித் தேர்தல் :

சென்னை 1-வது வட்ட கழக வேட்பாளர் கே. துரைராஜ்

சென்னை மாநகராட்சித் தேர்தலில் 1-வது வட்டம் தண்டையார்பேட்டை கழக வேட்பாளராக அறிவிக்கப்பட்ட தோழர் எம். வேதாசலம் எம்.எல்.ஏ. அவர்கள் தாமே விரும்பி முன்வந்து தலைமைக் கழக ஒப்புதலோடு தமது வேட்பு மனுவைத் திரும்பப் பெற்றுக்கொண்டதால், 1-வது வட்டத்தின் கழக வேட்பாளராகத் தோழர் துரைராஜ் அவர்கள் நிறுத்தப்பட்டிருக்கிறார் என்பது இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

--இரா. நெடுஞ்செழியன்
தலைவர், ஆட்சி மன்றக் குழு
9—10—68

அநீதிகள் தொடர்ந்து நடைபெற அனுமதியா?

தாழ்த்தப்பட்டோர் நிலை உயர அக்கறையற்ற தன்மை

டில்லி மாநாட்டில் தமிழக அமைச்சர் சத்தியவாணிமுத்து கண்டனம்

புதுடில்லி, அக். 10—

"தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்களுக்கு அநீதி இழைக்கப்படுவது--அவர்கள் கொடுமைப்படுத்தப்படுவது ஆகிய நிகழ்ச்சிகள் இன்னும் நடந்துகொண்டுதான் இருக்கின்றன!

"'தாழ்த்தப்பட்டோர் அதைத் தொடக்கூடாது; இதைத் தொடக்கூடாது' என்று கூறுபவர்களுக்குத் தண்டனை தரவேண்டும்; இதற்காக, தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தைத் திருத்த வேண்டும்.

"ஆதித்திராவிட மக்களுக்குப் பெரிய பதவிகள் தரப்பட வேண்டும்; கவர்னர், உயர் நீதிமன்ற நீதிபதி, வெளிநாட்டுத் தூதர், பல்கலைக்கழகத் துணைவேந்தர்-ஆகிய பதவிகள் அவர்களுக்குத் தரப்படவேண்டும்.

"தமிழக அரசைப் பொறுத்தவரையில், தீண்டாமையை ஒழிக்க எல்லா முயற்சிகளையும் செய்து வருகிறது. கலப்புத் திருமணம் செய்துகொள்வோர்களுக்குத் தங்கப் பதக்கம் வழங்கத் தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது."

இவ்வாறு, டெல்லியில் நடைபெற்ற தாழ்த்தப்பட்டோர் நல மாநாட்டில் பேசுகையில், தமிழக தாழ்த்தப்பட்டோர் நல அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து தெரிவித்தார்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தனித் தொகுதிகள்

மேலும் பத்தாண்டுக்கு நீடிக்க ஒப்புதல்

புதுடில்லி, அக். 10 —

"நாடாளுமன்றத்திலும், மாநிலச் சட்டமன்றங்களிலும் தாழ்த்தப்பட்டோருக்கு இடங்கள் ஒதுக்கி வைக்கும் ஏற்பாடு மேலும் 10-ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட வேண்டும்"

என்று மாநில சமூக நல அமைச்சர்கள் ஒருமனதாக ஒப்புக்கொண்டனர்.

சமூக நல அமைச்சர்கள் மாநாடு இன்று முடிவடைந்தது.

அரசியல் சட்ட விதியின்படி, இடம் ஒதுக்கல் ஏற்பாடு 1970-ம் ஆண்டுடன் முடிவடைய வேண்டும்; எனவே, மேலும் இந்த ஏற்பாட்டை 10-ஆண்டுக்காலத்துக்கு நீடிப்பதாயிருந்தால் அரசியல் சட்டத்தில் அதற்கேற்ப திருத்தம் செய்தாக வேண்டும்.

பின்தங்கிய வகுப்பினர்களுக்காக நான்காவது திட்டத்தில் ஒதுக்கப்படும் தொகை, மூன்றாவது திட்டத்தில் ஒதுக்கப்பட்டதைப்போல இரு மடங்காக இருக்கவேண்டுமென்று அமைச்சர்கள் ஒருமனதாக ஒப்புக்கொண்டனர். (3-வது திட்டத்தில் ரூ. 114-கோடி ஒதுக்கப்பட்டிருந்தது); ஆனால், தற்போதுள்ள நிலவரப்படி, திட்டக் குழு ரூ. 160 கோடிதான் ஒதுக்குமெனத் தோன்றுகிறது.

வேலை நீக்கம் செய்யப்பட்ட மத்திய ஊழியர் கதி என்ன?

புதுடில்லி, அக். 9—

செப்டம்பர் 10-ஆம் நாள் நடந்த மத்திய அரசு ஊழியர்களின் அடையாள வேலைநிறுத்தத்தில் கலந்துகொண்டதற்காக வேலை நீக்க நோட்டீசு அளிக்கப்பட்ட தற்காலிக ஊழியர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்வது சம்பந்தமாக முடிவு செய்வதை மத்திய அமைச்சரவை மறுபடியும் ஒத்திவைத்தது; மீண்டும் அக். 18-ம் நாள் கூடி, இதைப்பற்றி முடிவாகத் தீர்மானிக்கும். தலைமையமைச்சர் இந்திரா காந்தி தலைமையில் அன்றையக் கூட்டம் நடக்கும்.

வேலைநிறுத்தத்தில் சேர்ந்த தற்காலிக -- நிரந்தர ஊழியர்களின் எதிர்காலம் சம்பந்தப்பட்ட பிரச்

(4-ம் பக்கம் பார்க்க)

வரலாற்றில் அழியா பெரும்புகழ் பெற்றார்!

"வாளை வைத்துக்கொண்டு உயிர் வாழ்பவன் இறுதியில் வாளினால் உயிரிழக்க நேரிடும்" என்று பைபிள் கூறுகிறது. ஆனால், 'அகிம்சைக்காகப் பாடுபட்டுவந்தவர்கள், ஒருபோதும் வாளைப் பயன்படுத்தக்கூடாது' என்று மிக வன்மையாய் எதிர்ப்புத் தெரிவித்துவந்தவர்கள், இறுதியில் அகிம்சைத் தத்துவத்தை வாள் போன்ற ஆயுதங்கள் வெற்றி கண்டதன் விளைவாக உயிரிழக்க நேர்ந்திருப்பது வரலாற்றின் கொடுமைகளுள் ஒன்றாகும்!

இயேசு சிலுவையில் மாண்டார்; காந்தி கொலை செய்யப்பட்டார்; அண்மையில் டாக்டர் மார்ட்டின் லூதர் கிங் கொலை செய்யப்பட்டிருக்கிறார்; அப்படியென்றால், அகிம்சை ஒரு வெறும் கனவுதானா? தனி நபர்களையும் நாடுகளையும் ஆட்டிப்படைக்கும் உணர்ச்சிக் கொந்தளிப்பை மூடி மறைப்பதற்கான வெறும் வேதாந்தப் பேச்சுத்தானா?

இல்லை; அது உண்மையல்ல; இறந்த சீசருக்கு உயிர் வாழ்ந்த சீசரைவிட ஆற்றல் உண்டு! இயேசு சிலுவையில் மாண்டதன் விளைவாக ஒரு மாபெரும் 'மதம்' பிறந்ததோடு, இலட்சக்கணக்கான மக்களின் சிந்தனையையும், எண்ணங்களையும் உருவாக்க வாய்ப்பு ஏற்பட்டது! நமது நாட்டில் அரசோச்சுவதற்கு அடிப்படையாக மட்டுமன்றி, உலகெங்கிலுமுள்ள மக்களை ஊக்குவிக்கக்கூடிய ஒரு தத்துவம், காந்தியின் மரணத்திற்குப் பிறகு உருவாகியிருக்கிறது! உலகின் முகத்திலிருந்து இன ஒதுக்கல் எனும் தழும்பை அகற்றுவதற்கு டாக்டர் கிங்கின் கொலை துரிதமான முயற்சிகளை ஊக்குவிக்கக்கூடும்!

காந்தியின் பெயரைச் சொல்லாத மேடையே இல்லை. வீணுகத்தான் பெரும்பாலும் அவரது பெயரைக் குறிப்பிடுகிறார்கள் என்றே சொல்லலாம். அவரது பெயரைப் பயன்படுத்தி மிகவும் நேர்மையற்ற -- நற்பெயரிழந்த -- ஊழலில் ஈடுபடும் அரசியல்வாதிகள் இலாபமடைகிறார்கள்! ஒவ்வொரு நாளும் அவர் கொலை செய்யப்படுகிறார்! அவரது உடலைக் கொலை செய்வதில்லை -- உணர்வைக் கொலை செய்கிறார்கள்!

அரசியல் தத்துவத்திற்குக் காந்தி விட்டுச் சென்ற மிகப் பெரிய செல்வம் அகிம்சை நெறியாகும் என்பதில் ஐயமில்லை. ஆனால் அவர் வெளிப்படையான அகிம்சையை மட்டும் குறிப்பிட்டார் என்று எண்ணுவது தவறானதாகும்.

மக்களின் உள்ளங்களும், ஆன்மாக்களும் தூய்மையாக்கப்படாவிடில் போரைத் தவிர்க்க முடியாது என்பதும், அந்த நாள் வரையில் அழிவு அபாயம் மனித குலத்தை அழுத்திக் கொண்டிருக்கும் என்பதும் இப்போது தெள்ளத் தெளிவாகிவிட்டன.

அரசாங்கத்தில்கூட வேறுபாடே இல்லாத ஒரே சீரான சமூக அமைப்பை உருவாக்கும் போக்கு தென்படுகிறது.

சுதந்திர நிறுவனங்களும், சுயேச்சை நிறுவனங்களும் இடைவிடாமல் தாக்கப்படுகின்றன.

பழமையைப் பின்பற்றுவிடில், அரசியல் -- சமூகத் துறைகளிலிருந்து நீக்கப்படக்கூடிய அபாயம் இருக்கிறது.

சகிப்புத் தன்மையும், இரக்கமும்தான் நமது சமூகத்தில் தொன்றுதொட்டே இருந்து வரும் மரபு; புத்தர் இதைத்தான் அறிவுறுத்தினார். காந்தி இதை ஒரு உலக சமயமாக மாற்றி, அதற்கு ஒரு பெயரையும் ஒரு கொடியையும் வழங்குவதற்காகப் பாடுபட்டார்.

இந்திய சமூகத்திற்கு, 'மனித கௌரவம்' எனும் நன்னெறியை செயல்முறையில் வழங்கிச் சென்றது, காந்தி செய்த மற்றொரு தொண்டு ஆகும்.

பல நூற்றாண்டுகளாக நமது குடிமக்களில் பெரும்பாலானவர்களை நாம் கீழ்க் குடியினராகக் கருதி, அவர்களுக்கு அடிப்படை மனித உரிமைகளைக்கூட மறுத்து வந்தோம்.

நமது சமூகத்திலிருந்து இந்தக் கறையைத் துடைக்க காந்தி செய்த பணியைவிட வேறு எவரும் அதிக அளவில் செய்ததில்லை.

'தீண்டாமையை ஒழிக்க வேண்டும்' என்று நமது அரசியல் சாசனம் பெருமையுடன் கூறுகிறது என்றால், பழமைப் பற்றுள்ள இந்து மக்களின் உள்ளத்தில் காந்தி ஏற்படுத்திய உணர்வுதான் அதற்கு முக்கிய காரணம்.

எம். சி. சாக்ளா

'எத்தகைய வேலை செய்தாலும் அவமானமில்லை' என்பதை மெய்ப்பித்துக் காட்டுவதற்காக எல்லாவிதமான வேலைகளையும் அவரே செய்துகாட்டினார்.

நாம் பின்பற்றுவதாகக் கூறிக் கொள்ளும் சமயச் சார்பின்மைக் கொள்கை, காந்தி வகுத்த நெறிகளுக்கு இசைந்ததாக இல்லை; 'பிரிட்டிஷ் அரசாங்கம் பின்பற்றும் வகுப்புவாதக் கொள்கையைப்போல இருக்கிறது' என்றே சொல்லவேண்டும்.

இன்னமும் சிறுபான்மையினர் நமது தேசிய அமைப்பிலிருந்து மாறுபாட்டவர்கள் என்றும், அதற்கு வெளியே இருப்பவர்கள் என்றும்கூட கருதுகிறோம்; அவர்களுக்கென்று தனிப் பிரதிநிதிகளை ஒதுக்குகிறோம்.

எல்லாக் குடிமக்களையும் ஒரே விதத்தில் கருதி, அவர்களது திறமையின் அடிப்படையில் நியமிப்பதற்குப் பதிலாக வகுப்பின் அடிப்படையில் நியமனங்களைச் செய்கிறோம்.

ஒருவரது வகுப்பினாலோ, சாதியினாலோ அவரைத் தகுதியற்றவர் என்று தள்ளிவிடுவது அல்ல உண்மையான சமயச் சார்பின்மை. முன்பிருந்த பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் பின்பற்றிவந்த பிரித்தாளும் தந்திர முறைதான் இது!

'சிறுபான்மை வகுப்புகளை'ச் சேர்ந்தவர்கள் என்ற ஒரே காரணத்துக்காகப் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள், தகுதியில்லாதவர்களைத் தேர்ந்தெடுத்தார்கள்; இதனால் அந்த வகுப்புக்கும் நன்மை ஏற்படவில்லை; ஏனெனில், தங்களது தகுதியைவிட, வகுப்புப் பெயரைத்தான் அவர்கள் அதிகமாக நம்பி வந்தார்கள். இந்தக் கொள்கையின் விளைவாகப் பெரும்பான்மையினரிடையே அதிருப்தி ஏற்பட்டது.

'மனிதர்கள் அனைவரும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள்; குறிப்பாக இந்தியர்கள் அனைவரும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள்' என்ற நோக்கத்தை அடைவதற்கும் அவரது அறிவுரைகள் உதவி புரிந்துள்ளன என்பதையும், வரலாற்றுப் புத்தகத்தில் அவரது பெயர் அழியாத இடத்தைப் பெற்றுவிட்டது என்பதையும் வரும் தலைமுறையினர் உணருவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

—புதுடில்லி காந்தி அமைதி நிறுவனம் வெளியிட்டுள்ள 'மகாத்மா காந்தி -- 100 ஆண்டுகள்' என்னும் புத்தகத்திலிருந்து.

கல்வியைப் பற்றிக் காந்தியார்

மனிதர்களின் உடலிலிருந்தும் உள்ளத்திலிருந்தும் மிகச் சிறந்த அம்சங்களை வெளிக் கொண்டு வருவதுதான் கல்வி.

எழுத்தறிவு கல்வியின் முடிவோ, துவக்கமோகூட அல்ல; மனிதன் கல்வி கற்பதற்கான ஒரு வழிமுறைதான் அது! எழுத்தறிவு என்பது கல்வியல்ல!

எந்த நாட்டில் கல்வி கற்பிக்கப்படுகிறதோ, அந்த நாட்டின் முன்னேற்றத்திற்கு ஏற்ப வெளியே தெரியும் அளவுக்குக் கல்வி அமைந்திருக்க வேண்டும்.

இந்த உலகில் உண்மையான அமைதி நிலவ வேண்டுமானால்—போருக்கு எதிரான உண்மையான போராட்டத்தை நடத்த வேண்டுமானால்—முயற்சியைக் குழந்தைகளிலிருந்துதான் துவக்க வேண்டும்.

அவர்கள் அறியாப் பிள்ளைகளாக இருக்கும்போதே நல்ல முறையில் வளரத் தொடங்கிவிட்டால், நாம் போராட வேண்டியிருக்காது; பயனற்ற -- செயலற்ற தீர்மானங்களை இயற்ற வேண்டியிருக்காது.

இந்த உலகம் முழுவதும் தெரிந்தோ -- தெரியாமலோ எந்தச் சமாதானத்துக்கும் அன்புக்குமாக ஏங்குகிறதோ -- அந்த அன்பும் அமைதியும் உலகின் எல்லாப் பகுதிகளுக்கும் பரவும் பொருட்டு, அதை நோக்கமாய் வைத்துக் கொண்டு நாம் அன்புப் பாதையிலும் அமைதிப் பாதையிலும் உயரச் செல்லவேண்டும்.

நிலப் பதிவு முறையில் மாற்றம்

விவசாயிகள் விவரம் அறிந்துகொள்ள வசதி

சட்ட அமைச்சர் செ. மாதவன் அறிவிப்பு

மதுராந்தகம், அக். 9—

"தமிழகத்தில் சாதாரண விவசாயிகூட நிலத்தைக் கண்டு கொள்ளும் விதத்தில் நிலப் பதிவு முறையைச் சீரமைப்பதுபற்றி அரசு தீவிரமாகப் பரிசீலனை செய்துவருகிறது"

என்று சட்டத் துறை அமைச்சர் செ. மாதவன் தெரிவித்தார்.

திருவள்ளூர் வட்டம் கடம்பத்தூரில், மக்கள் குறைகளைக் கேட்டறிந்து நீக்கும் மூன்று அம்சத் திட்டத்தை அமைச்சர் துவக்கிவைக்கையில் இத்தகவலைக் கூறினார்.

விழாவுக்கு கடம்பத்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சி. வி. எம். அண்ணாமலை தலைமை வகித்தார்.

அனைவரையும் வரவேற்று செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கே. இலட்சுமிகாந்தன் பாரதி பேசுகையில், செங்கற்பட்டு மாவட்டத்தில் மூன்று அம்சத் திட்டம் செயல்படும்விதத்தை விவரித்தார்.

மூன்று அம்சத் திட்டத்தை அமைச்சர் மாதவன் துவக்கிவைத்துப் பேசுகையில் மேலும் கூறியதாவது:—

"கிராமங்களில் உள்ள மக்களுக்கு அவர்களது நிலங்கள் பற்றிய விவரங்கள் தெரியவில்லை.

ஒரு விவசாயி தன் நிலத்தைக் கண்ணால் பார்த்திருப்பானே தவிர, அந்த நிலத்தின் விவரங்கள் அவனுக்குத் தெரியாது.

நிலத்தின் சர்வே நம்பர், பட்டா நம்பர், பரப்பளவு ஆகியவை பெரும்பாலான விவசாயிகளுக்குத் தெரியாது.

அவனது நிலம் சம்பந்தப்பட்ட விவரங்களைத் தெளிவாக அறிந்துகொள்ள மேல்நாடுகளிலிருந்து கண்டவற்றையும், சேகரித்துள்ள விவரங்களையும் வைத்துக்கொண்டு ஓர் அதிகாரியைக் கொண்டு அரசு பரிசீலனை செய்துவருகிறது; விரைவில் நில சம்பந்தப்பட்ட தெளிவான திட்டத்தை அரசு அறிவிக்கும்.

கல்பாக்கம், தூத்துக்குடி, எண்ணூர் ஆகிய அனல் மின்சார நிலையங்கள் செயல்பட ஆரம்பித்தால் விவசாயிகளுக்குக் குறைந்த செலவில் மின்சாரம் தரப்படும்."

விழாவில் திரு. கா. வேழவேந்தன் எம்.எல்.ஏ., டி. கே. பொன்னுவேலு எம்.எல்.சி, கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு. சுப்பராய முதலியார் ஆகியோரும் பேசினர்.

ஜப்பானின் சங்கட நிலை

அளவுக்குமிஞ்சிய அரிசி விளைச்சல்!

டோக்கியோ, அக். 9—

ஜப்பானில் தேவைக்கு மிகவும் அதிகமான அளவில் அரிசி குவிந்துவிட்டது!

மிகுதியாக உள்ள இந்த அரிசியை என்ன செய்வதென்று ஜப்பானுக்குத் தெரியவில்லை!

இந்தியா போன்ற நாடுகளுக்கு அரிசிப் பற்றாக்குறைப் பிரச்சினை ஏற்பட்டிருக்கையில் ஜப்பானுக்கு அமோக அரிசி விளைச்சல் மூலமாகத் 'தலைவேதனை' ஏற்பட்டுள்ளது!

ஜப்பானுக்கு இப்போதுள்ள நிலையில் இரு வழிகளே உள்ளன. ஒன்று—மிகுதி அரிசியைப் பற்றாக்குறையால் தவிக்கும் ஆசிய நாடுகளுக்குக் கருணை காட்டிக் கொடுத்துதவ வேண்டும்; அல்லது, அந்த அரிசியைக் கால்நடைகளுக்குத் தீவனமாகப் போட வேண்டும்; இதைத் தவிர வேறு வழி கிடையாது!

சென்ற ஆண்டில் என்றும் இல்லாத அளவுக்கு ஜப்பானில் அரிசி விளைச்சல் அமோகமாக இருந்தது. நடப்பு ஆண்டில் விளைச்சல் அந்த அளவுக்கு இல்லாவிட்டாலும், அமோகமாகவே இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு 142.6 இலட்சம் டன் விளைச்சல் இருக்குமாம்; சென்ற ஆண்டில் 144.5 இலட்சம் டன் விளைச்சல் ஏற்பட்டது.

மிகுதி அரிசியை மற்ற நாடுகளுக்கு விற்பனை செய்வதற்கான திட்டங்கள் வெற்றி பெறவில்லை; ஏனெனில், ஜப்பான் அரிசியின் விலை உலகச் சந்தை விலையைக் காட்டிலும் இரு மடங்குக்கும் அதிகமாக இருக்கிறது. இங்கிலையில், உணவுப் பற்றாக்குறையுள்ள ஆசிய நாடுகள்கூட ஜப்பான் அரிசியை விலைக்கு வாங்க முன்வரவில்லை!

"'இன்டிகா' ரகத்தைச் சேர்ந்த நீள அரிசியைத்தான் இந்தியா இந்தோனேசியா போன்ற நாடுகள் விரும்புகின்றன; வட்ட வடிவம் உள்ள ஜப்பானிய அரிசிக்கு அதிக விலை கொடுப்பதற்கு அவை தயாராக இல்லை" என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

ஆகவே, உணவுப் பற்றாக்குறை நாடுகளுக்கு ஜப்பான் தனது மிகுதியான அரிசியை 'உதவி'யாக அளிக்கவேண்டும்; இல்லாவிட்டால், கால்நடைகளுக்குத் தீவனமாகக் கொடுக்க வேண்டும்.

2,326 மூட்டை கோதுமை மறைந்தமாயம்!

உணவுக் கார்ப்பொரேஷன் அதிகாரிகள் விட்ட 'கோட்டை'

ஆமதாபாத், அக். 9—

சுமார் ரூ. 2 இலட்சம் பெறுமானமுள்ள 2,326 மூட்டை இறக்குமதி செய்யப்பட்ட கோதுமை ஆமதாபாத் அருகேயுள்ள கிடங்கு ஒன்றிலிருந்து மாயமாக மறைந்துவிட்டதாக இந்திய உணவுக் கார்ப்பொரேஷன், போலீசிடம் புகார் தெரிவித்திருக்கிறது.

உணவுக் கார்ப்பொரேஷன் துணை வட்டார நிர்வாகி புகாரைத் தாக்கல் செய்திருக்கிறார்.

அதிகாரிகள் சிலர் அண்மையில் கிடங்குக்குச் சென்று பார்த்தபோது கோதுமை மூட்டைகள் காணவில்லை என்பது தெரியவந்ததாம்.

ஆமதாபாத்திலிருந்து 7 மைல் தொலைவில் உள்ள இச்கிடங்கு, வெளிப்பக்கமாகப் பூட்டப்பட்டிருந்ததை அதிகாரிகள் கண்டனர்; ஆனால் உட்பக்கமிருந்தும் கதவு மூடப்பட்டிருந்தது; உடனே இது பற்றி மேலதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டது; உயர்தர அதிகாரிகள் மேற்கொண்டு விசாரித்ததில் கோதுமை மூட்டைகள் மறைந்தது தெரியவந்தது.

மாவட்டப் போலீசு சூப்பரின்டெண்டு புலன் விசாரித்து வருகிறார்.

முதல் சட்டம்!

"நாளைய உலகம் அகிம்சையின் அடிப்படையிலான ஒரு சமூகமாக இருக்கும்; அப்படித்தான் இருக்கவேண்டும்; அதுதான் முதல் சட்டம்; மற்ற நன்மைகள் அனைத்தும் அதிலிருந்து வரும்."

—காந்தியார்

கல்வியை வளர்க்க அள்ளியள்ளி வழங்குவீர்

செல்வம் படைத்தோருக்கு அமைச்சர் நெடுஞ்செழியன் வேண்டுகோள்

குடந்தைக் கல்லூரி விழாக்களில் பங்கேற்பு

குடந்தை, அச். 8—

இன்று இங்கு அரசினர் ஆண்கள் கலைக் கல்லூரியில் ரூ. 1,47,000 செலவில் கட்டப்பெற்றுள்ள கலைக்கூடத்தை கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"நூருண்டுகட்கு மேலாக நடந்துவரும் இக்கல்லூரியில் பட்ட மேல்படிப்பு இப்போதுதான் தொடங்கப் பெற்றிருப்பது வியப்பாகவே இருக்கிறது.

பி.காம். பட்டப் படிப்பை மேலும் பல இடங்களிலும் தொடங்குவது பற்றி ஆராயுமாறு கல்வித் துறை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிருர்.

'ஷிட்டு முறை'யைக் கையாண்டு இரண்டு பங்கு மாணவர் கூடுதலாகப் படிக்கச் செய்ய வழிவகைகள் காணவேண்டும்.

பொதுக் கல்விக்கு (மருத்துவ—வேளாண்மைக் கல்லூரி நீங்கலாக) ரூ. 58 கோடி—அதாவது தமிழக அரசின் மொத்த வரவு-செலவில் 24 சதவிகிதத்தைக் கல்விக்கும், ரூ. 14.80 கோடி மருத்துவத் துறைக்கும் அரசினர் செலவிடுவது போதாது.

செல்வம் படைத்தோர் கல்விச் செல்வத்தை வளர்க்க அள்ளி அள்ளிக் கொடுக்க வேண்டும்.

தமிழகத்தில் 42 சதவிகிதத்தினரே படித்தவர்; படித்தவர் தொகை ஏனைய உலக நாடுகளான அமெரிக்கா, இரஷ்யா, ஜப்பான், பிரிட்டன் போன்ற நாடுகளில் உள்ளதைப்போல் வளர அனைத்தும் செய்தல் வேண்டும்.

மாணவர்கள் கட்டுப்பாட்டோடு, சொல்வன்மையும் செயலாற்றலும் பெறுதல் வேண்டும்."

மாவட்ட ஆட்சித் தலைவர் இரங்கபாஷ்யம் விழாவிற்குத் தலைமைவகித்தார்.

மகளிர் கலைக் கல்லூரியில்:

குடந்தை அரசினர் மகளிர் கலைக் கல்லூரியின் செயலாட்சி மன்றத்தை கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் திறந்து வைத்ததுடன் கலைக் கூடத்திற்கும் அடிக்கல் நாட்டினுர்.

கல்லூரி முதல்வர் திருமதி இராதா அம்மையார் வரவேற்றுப் பேசுகையில், முதலமைச்சர் இக்கல்லூரிக்கு வருகை புரிந்தபோது உறுதிமொழி அளித்த வண்ணம் தமிழக அரசினர் ரூ. 8½ இலட்சம் உடனடியாக வழங்கியதால் 8 மாதங்களுக்குள் புதிய கட்டிடத்தில் இக்கல்லூரி இவ்வாண்டு தொடக்க முதல் இயங்கிவருகிறதென்றும், சுழற்குழு முயற்சியால் கலைக்கூடக் கட்டிடத்திற்கு ரூ. 1 இலட்சம் நிதி சேர்க்கப்பட்டிருக்கிறதென்றும் குறிப்பிட்டார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் இரங்கபாஷ்யம் தலைமையில்நடந்த விழாவில் அமைச்சர் நெடுஞ்செழியன் பேசுகையில், 'நூருண்டுகளுக்குமுன் பொன்னி (காவிரி) ஆற்றின் கரையில் அரசினர் ஆண்கள் கல்லூரி அமையப் பெற்றதுபோல் இந்தப் புதிய மகளிர் அரசினர் கல்லூரி அரசலாற்றங் கரையில் வனப்பாக அமைந்திருப்பது மகிழ்ச்சிக்குரியது' என்று குறிப்பிட்டார்.

'பெண்கள் கல்விக்கு உதவ அனைவரும் முன்வருதல் வேண்டும்; 'பெண்கள் படித்தால்தான் நாடு முன்னேறும்' என்றும் கூறினுர்.

அமைச்சர் மேலும் பேசுகையில் கூறியதாவது:—

"கல்விக்கும், மருத்துவத் துறைக்கும் மட்டுமே பொதுமக்கள் உதவுகின்றனரேயன்றி காவல் நிலையம் கட்டுவதற்கல்ல!

பெண்கள் தங்கள் படிப்பினைத் திருப் பிடிக்க அனுமதிக்கலாகாது. படிக்கும்பொழுதே சம்பாதிக்கும் வழிவகைகள் காண வேண்டும்.

நம் மக்கள், ஆற்றலில் குறைந்தவர்களல்லர்; என்றுலும், கட்டுப்பாட்டை வளர்த்துக்கொள்ள வேண்டும்; அதுவே நமது நாட்டை விழுமிய நிலைக்கு அழைத்துச் செல்லும்.

பிள்ளைகளின் கல்விக்குச் செலவிட்டதால் ஒரு குடும்பத்தின் பொருளாதார நிலை தாழ்வுற்ருல் அக்குடும்பத்தை நாம் போற்றி வணங்கலாம்; ஆனுல், திருமணத்திலும், மற்றச் சடங்குகளிலுமே நடுத்தரக் குடும்பங்கள் அழிகின்றன; இதில் மக்கள் பொறுப்பு மிகுதியாக இருக்கிறது.

ஒரு காலத்தில் மத்திய அரசில் 18 ஐ. சி. எஸ். அதிகாரிகளில் 14 பேர் தமிழ்நாட்டவராயிருந்த நிலை இன்று மாறிவிட்டது; ஐ. ஏ. எஸ்., ஐ. பி. எஸ் தேர்வுகளில் நம் வேட்பாளர்கள் 3, 4-ந் தர நிலைக்கு வந்திருப்பது நமக்குப் பெருத்த வேதனையைத் தருகிறது.

'கல்வியில் சிறந்த தமிழ்நாடு' என்று என்றும் போற்றப்படும் நிலையை நாம எய்தவேண்டும்.

இக்கல்லூரிக்கு மாணவியர் தங்கும் விடுதி கட்டிக்கொடுக்க, அரசினர் ஆவன செய்வர்."

(5-ம் பத்தித் தொடர்ச்சி)

மதித்து, இவ்வாண்டு 28-நாட்களுக்குத் தர அனுமதித்துள்ள அரசுக்கு நெசவாளர்களு'ம், பொதுமக்களும் மிகவும் கடமைப்பட்டிருக்கிருர்கள்.

மேலும் தமிழக அரசின் பதிவு பெற்ற அதிகாரிகளுக்கும், அரசின் பதிவு பெருத சிப்பந்திகளுக்கும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்க விற்பனை நிலையங்களின் மூலம் கைத்தறித் துணிகளைக் கடனுக்கு விற்கும் திட்டம் இவ்வாண்டு அமுல்படுத்தப்பட்டு வருகிறது. கடைநிலை ஊழியர்கள் உட்பட எல்லா நிரந்தரச் சிப்பந்திகளும் ஒரு மாத அடிப்படைச் சம்பள அளவிற்குக் கடனில் கைத்தறித் துணி வாங்க இத்திட்டம் வகை செய்யும்.

இத்திட்டத்தின் கீழ் கைத்தறித் துணி வாங்கும் அரசாங்க அதிகாரிகளுக்கும், ஊழியர்களுக்கும் மற்றவர்களுக்கு அனுமதிக்கப் படுவதைப்போல் 10 சதவிகிதம் 'ரிபேட்' அனுமதிக்கப்படும்.

இந்தக் கடன் விற்பனைத் திட்டத்திற்கு அனுமதி தந்த தமிழக அரசுக்கு நெசவாளர் நெஞ்சமெலாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது.

இத்தகைய அரிய வாய்ப்புக்களை நன்கு பயன்படுத்திக்கொண்டு காலத்திற்கேற்ற ரகங்களில் கெட்டிச் சாயம் கொண்ட--விலை மலிவான கைத்தறி ஆடைகளைப் பெருமளவில் வாங்கி, நெசவாளர் பெருங்குடி மக்களை ஆதரிக்க வேண்டுமெனப் பொதுமக்களையும், தமிழக அரசு ஊழியர்களையும் மீண்டும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

கடமை அது!

" சிறுபான்மையினருக்குச் செவிசாய்த்து, அவர்களை ஒருவிதத்திலும் அவமதிக்காமல் பார்த்துக்கொள்வது பெரும்பான்மையினரின் கடமையாகும்."

—காந்தியார்

தமிழ் நெஞ்சத்தின் எண்ணம் ஈடேற....

கைத்தறிப் புத்தாடைகளை வாங்குவீர்!

நெசவாளர் உள்ளம் மகிழ்ச்சியுறச் செய்வீர்!

"உழவுத் தொழிலுக்கு அடுத்தபடியாக நமது நாட்டில் மிகப் பெரிய குடிசைத் தொழிலாக விளங்கிவருவது கைத்தறித் தொழிலாகும். பரவலாக நாடு முழுவதும் பரந்துள்ள நேசவுத் தொழில், பல இலட்சக்கணக்கான மக்களுக்கு வாழ்வளித்து வரும் வகையில், நாட்டின் பொருளாதாரத்தில் முக்கிய இடம் வகித்து வருகிறது; அதாவது, இத்தொழில் நேரடியாக 75 இலட்சம் மக்களுக்கும், மறைமுகமாக 75 இலட்சம் மக்களுக்கும் வேலைவாய்ப்பு அளித்துவருகிறது. அதுமட்டுமன்றி, நாட்டின் துணித்தேவையில் மூன்றில் ஒருபங்கை கைத்தறித் தொழில் உற்பத்தி செய்து வருகிறது.

"தமிழ்நாட்டில் மட்டும் இத்தொழிலை நம்பி சுமார் 30 இலட்சம் நேசவாளர்கள் வாழ்கிருர்கள். இங்கே உள்ள ஒவ்வொரு பதினேராவது மனிதனும் நேசவுத் தொழிலை நம்பி வாழ்கின்றவன்தான்.

'இப்படிப்பட்ட இத்தொழில் சீரழிந்தால் நாட்டில் எத்தகைய பயங்கரமான விளைவுகள் ஏற்படும் என்பதை உணர்ந்துதான் நமது மத்திய--மாநில அரசுகள் இத்தொழிலுக்கு எவ்வளவோ உதவிகளைச் செய்துவருகின்றன.

" அரசுகள் எவ்வளவு உதவிகள் செய்தாலும், மக்களின் ஆதரவு இல்லாவிடில் இத்தொழில் முன்னேற முடியாது; எனவேதான், நாட்டின் நலனையும், பொருளாதார மேம்பாட்டினையும், நெசவாளர்களின் நல்வாழ்வையும் கருத்தில் கொண்டு, தீபாவளிக்குக் கைத்தறி ஆடைகளைப் பெரும் அளவில் வாங்க வேண்டுமெனப் பொது மக்களைக் கேட்டுக் கொள்கிறேன்"

இவ்வாறு தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத் தலைவர் திரு. எம். பி. நாச்சிமுத்து அவர்கள் விடுத்துள்ள வேண்டுகோளில் சுட்டிக்காட்டிக் கேட்டுக் கொண்டிருக்கிருர். தீபாவளி பண்டிகையையொட்டி அவர், 'நெசவாளர்களுக்கு வாழ்வளியுங்கள்' என்ற தலைப்பில் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் கூறியிருப்பதாவது:—

"பண்டை நாள்தொட்டு பண்டிகைக் காலங்களில், 'புத்தாடைகள் அணிவது' என்ற பழக்கத்தைத் தமிழர்கள் மேற்கொண்டு வந்துள்ளனர்.

'புத்தாடைகள் இன்றேல் பண்டிகை இல்லை' என்ற நிலைக்குப் பண்டிகைகளையும், புத்தாடைகளையும் தமிழ் மக்கள் இணைத்து வைத்துள்ளனர். பண்டிகைகளின் முழு நிறைவே புத்தாடைகளில்தானே இருக்கிறது?

பண்டிகைகளோடு புத்தாடைகளை இணைத்துப் பார்க்கும் போது அங்கு கைத்தறிப் புத்தாடைகளுக்குத்தான் முதலிடம் தரப்படுகிறது.

கைத்தறிப் புத்தாடைகளின் எழில் வண்ணக் கவர்ச்சியில், அதன் பொலிவில்—உறுதியில்—விலை மலிவில்—அகமும் முகமும் இரட்டிப்பு மகிழ்ச்சியில் மலர்கின்றன.

கைத்தறிப் புத்தாடைகளைப் பண்டிகைக் காலங்களில் வாங்கி அணிவதால், அணிபவர்கள் மட்டும் பண்டிகையின் பேரின்பத்தை அடைவதில்லை; அந்த ஆடைகளைத் தயாரித்துக் கொடுக்கும் எண்ணற்ற நெசவாளர் குடும்பங்களிலும் மகிழ்ச்சி நிறைய -- இன்ப ஒளி பரவ -- அது காரணமாக அமைந்துவிடுகிறது. 'தான் பெற்ற இன்பம் பெருக இவ்வையகம்' என்பது தானே தமிழரின் தாரக மந்திரம்! இந்தத் தமிழ் நெஞ்சத்தின் புனித எண்ணம் ஈடேற திபாவளி போன்ற பண்டிகை நாட்களில் கைத்தறிப் புத்தாடைகளை வாங்கி அணிவது தான் தமிழ் மக்களின் உயர்ந்த இந்த உளப்பாங்கிற்கு உகந்த ஒன்றுகும்.

பண்டிகை நாட்களில் பொதுமக்கள் கைத்தறி ஆடைகளுக்குத் தரும் நல்லாதரவினை நாங்கள் என்றும் நன்றியுடன் போற்றி வருகிறேும்; எங்கள் நம்பிக்கையைப் பொதுமக்கள் என்றும் பொய்த்துப் போகவிட்டதில்லை.

நம் நாட்டிலுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தினைப் போக்க பண்டிகைகளின்போது பொது மக்கள் ஏராளமான கைத்தறி ஆடைகளை வாங்கினுல் நெசவாளர்களின் வேலைத் திறன் பெருகும் -- உழைப்பு கூடும் -- உற்பத்தித் திறம் பெருகும்! அவர்களின் உள்ளங்களிலே மகிழ்ச்சியும் பொங்கும்! அதனுல் நாட்டின் பொருளாதாரம் செம்மையாகும்!

தீபாவளி விற்பனை சிறப்பாக அமைய ஆண்டுதோறும் கைத்தறி ஆடைகளின் விற்பனையில் சாதாரண தள்ளுபடி தொகையுடன், தனித் தள்ளுபடியும் சேர்த்து அளிக்கப்படுகிறது; அது இவ்வாண்டும் தரப்படுகிறது.

வழக்கமான ரூபாய்க்கு ஐந்து காசு தள்ளுபடியுடன், தீபாவளிப் பண்டிகைக்கான இந்தத் தனித்தள்ளுபடியான ரூபாய்க்கு ஐந்து காசும் சேர்த்து, மொத்தம் ரூபாய்க்கு 10 காசு தள்ளுபடி 24—9—68 முதல் தரப்பட்டு வருகிறது; இது 21—10—68 வரை மொத்தம் 28-நாட்களுக்கு தரப்படும்.

இந்தத் தனித் தள்ளுபடி சலுகை, பருத்திக் கைத்தறி ஆடைகளுடன் பட்டு -- செயற்கைப் பட்டு -- பருத்தியும் செயற்கைப் பட்டும் கலந்த கலப்புரக ஆடைகள் உட்பட எல்லா ரகக் கைத்தறி ஆடைகளுக்கும் கிடைக்கும்.

முன்பெல்லாம் தீபாவளி சமயத்தில் எட்டு நாட்களுக்கு மட்டுமே அனுமதிக்கப்பட்ட இந்தத் தனித் தள்ளுபடி, சென்ற ஆண்டு 15-நாட்களுக்குத் தர அனு

(2-ம் பத்தி பார்க்க)

ரோஜா
பாக்கு & புகையிலை
N. V. K. M. & சன்ஸ், திண்டுக்கல்

தீபாவளிக்கு
விசேஷ தள்ளுபடி



எல்லா
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறித்துணி விற்பனையில்
24.9.68 முதல் 21.10.68 வரை
இந்த தள்ளுபடி எல்லா "கோ-ஆப்டெக்ஸ்" விற்பனை நிலையங்களிலும், பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலும் கிடைக்கும்;
கோ-ஆப்டெக்ஸ் துணிகள் வாங்கும்போது
- நீங்கள் கோ-ஆப்டெக்ஸ் வண்ணங்கள்.
- மனதை கவரும் வண்ணங்கள்.
- ஆவலைத் தூண்டும் அழகு டிசைன்கள்.
- நெருங்கி இழைந்த நெசவு ஆகியவைகளை வாங்குகிறீர்கள்.
தமிழ்நாடு கைத்தறி நேசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட்,
பாலசுந்தரம் பில்டிங்,
எழும்பூர், சென்னை-8.
ELEGANT

வெடிகுண்டு -- ஆயுதங்களுடன் போலீசார் மறைந்த மாயம் !

தேடிப் பிடிக்க இந்தியா முழுவதிலும் வலைவீச்சு

கேரளத்திலிருந்து வெளியாகும் தகவல்

திருவனந்தபுரம், அக். 9—

திருவனந்தபுரத்தில் வைக்கப்பட்டிருத்கும் மத்திய ரிசர்வ் போலீசுப் படையைச் சேர்ந்த ஒரு தலைமைப் போலீசுக்காரரும் மூன்று போலீசுக்காரர்களும் ஏராளமான ஆயுதங்களுடனும், வெடி குண்டுகளுடனும் மறைந்துவிட்டார்கள்.

குறைந்தபட்சம் ஆறு கைக்குண்டுகள், இரண்டு ஸ்டென் துப்பாக்கிகள், இரண்டு கைத் துப்பாக்கிகள் அறுநூறு தோட்டாக்கள், வெடி மருந்துகள் ஆகியவை காணவில்லை என்று புகார் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

காணமற்போன இந்த நான்கு பேரும் மத்தியப் பிரதேசத்தில் பயங்கரக் கொள்ளைக்காரர்கள் நிரம்பிய பகுதிகளைச் சேர்ந்த கிராமங்களிலிருந்து ரிசர்வ் போலீசுப் படைக்கு எடுக்கப் பட்டவர்களாம்.

இவர்களைக் கண்டுபிடிக்குமாறு இந்தியா முழுவதும் கம்பி இல்லாத் தந்திமூலம் செய்திகள் பறந்துள்ளன. ஆனால் இதுவரையில் ஒரு தகவலும் தெரியவில்லை.

இந்த நான்கு பேருக்கும் இந்த வட்டார மொழிகூடத் தெரியாது.

அரசியல் அல்லது சமூக விரோதச் சக்திகளின் உதவி இல்லாமல், வடநாட்டைச் சேர்ந்த நான்கு பேர், ஏராளமான துப்பாக்கிகள், வெடி மருந்துகளுடன் இவ்வளவு எளிதில் மறைந்திருக்க முடியாது என்று இந்த வட்டாரங்களில் கருதப்படுகிறது.

காமராசர் -- சுப்பிரமணியம் தகராறு

கட்சிக் கூட்டத்தில் கடும் வாக்குவாதம்

புதுடில்லி, அக். 9—

புதுடில்லியில் நடைபெற்ற அனைத்திந்தியக் காங்கிரசுக் குழுக் கூட்டத்தில், திரு. காமராசருக்கும், திரு. சி. சுப்பிரமணியத்துக்குமிடையேயுள்ள பிளவு வெளிப்பட்டது; இருவரும் கடுமையான வாக்குவாதம் செய்ததாகத் தெரிய வருகிறது.

"இனியாகிலும் சுப்பிரமணியம், தமிழ்நாடு காங்கிரசுக் கமிட்டியைக் கூட்டி சம்பந்தப்பட்ட காங்கிரசுக்காரர்களைக் கட்சியிலிருந்து நீக்கவேண்டும்; இல்லாவிட்டால, நானே தமிழ்நாடு காங்கிரசுக் கமிட்டியைக் கூட்டி அத்தகைய நடவடிக்கையை எடுக்க நேரிடும்" என்று காமராசர் எச்சரித்ததாகத் தெரிகிறது.

தமிழ்நாட்டில் காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த சிலர் பொது மேடைகளில் தம்மை வெளிப் படையாகத் தாக்கிப் பேசியதை கோபத்துடன் சுட்டிக்காட்டினர் காமராசர்; 'கட்சிக் கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் மீறிய அவர்கள்மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை' என்று திரு. சுப்பிரமணியத்தின்மீது குறை கூறினார்.

"பொதுக்கூட்டம் போட்டு காமராசரை பகிரங்கமாகத் தாக்கிப் பேசிய காங்கிரசுக்காரர்கள், அனைத்திந்தியக் காங்கிரசுக் கமிட்டி உறுப்பினர்கள்; அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் தமிழ்நாடு காங்கிரசுக்கு இல்லை" என்று சுப்பிரமணியம், காமராசருக்குப் பதில் கூறியதாகத் தெரிகிறது; 'அனைத்திந்தியக் காங்கிரசுக் கமிட்டி உறுப்பினர்களான அவர்கள்மீது, 'தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர்' என்ற முறையில் தாம் எந்தவிதமான நடவடிக்கையும் எடுப்பதற்கில்லை என்று கண்டிப்பாக அறிவிக்கும்வகையில் அவரது பதில் அமைந்தது.

தம்மை வெளிப்படையாகத் தாக்கிப் பேசியவர்கள் அனைத்திந்தியக் காங்கிரசுக் குழு உறுப்பினர்களாக இருந்தாலும், 'தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர்' என்ற முறையில் அவர்கள்மீது சுப்பிரமணியம், தக்க ஒழுங்கு நடவடிக்கை எடுத்துப் பின்னர் தமது நடவடிக்கைச்கு அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைமையின் ஒப்புதலைப் பெற்றிருக்க முடியும் என்று காமராசர் வாதித்ததாகத் தெரிகிறது.

சோவியத் இரஷ்யா இராணுவச் செலவு

பெல்கிரேடு, அக். 10—

சோவியத் இரஷ்யாவின் இராணுவச் செலவு, இந்த ஆண்டில ரூ. 37,500 கோடி எனத் தெரிய வருகிறது; சென்ற ஆண்டை விட இது ரூ. 11,000 கோடி அதிகமாம்.

திராவிட முன்னேற்ற கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடு பவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] அச்சகத்தில் (24, [illegible] தெரு, சென்னை-11) அச்சிட்டு [illegible]

எம். எஸ். மணிக்கு அறுவைச் சிகிச்சை

இருதயத்தில் செயற்கை உறுப்பு பொருத்தப்பட்டது

வேலூர், அக். 8—

திருச்சி 1-வது தொகுதி சட்டமன்ற உறுப்பினரான எம். எஸ். மணி, இருதய நோய்க்காக வேலூர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்தார்.

இருதய 'வால்வு' ஒன்று பழுதுபட்டு இருப்பதை டாக்டர்கள் கண்டுபிடித்தார்கள்; அதை அகற்றிவிட்டு, பிளாஸ்டிக்கினல் செய்த செயற்கை உறுப்பைப் பொருத்த முடிவு செய்யப்பட்டது. அதன்படி அவருக்கு 4 மணிநேரம் அறுவைச் சிகிச்சை நடந்தது; இருதயத்தில் பழுதடைந்து இருந்த 'வால்வு' அகற்றப்பட்டு, பிளாஸ்டிக் 'வால்வு' பொருத்தப்பட்டது.

அறுவைச் சிகிச்சை வெற்றிகரமாக முடிந்ததாக டாக்டர்கள் தெரிவித்தனர். அவருடைய உடல் நலம் நன்கு தேறி வருகிறது.

கொளத்தூர் கோதண்டத்துக்கு அறுவைச் சிகிச்சை

சென்னை, அக். 9—

வயிற்றுவலி காரணமாக சென்னைத் தலைமை மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் சட்டமன்ற தி. மு. க. உறுப்பினர் கொளத்தூர் கோதண்டத்துக்கு இன்று காலை 11-மணிக்கு அறுவைச் சிகிச்சை நடைபெற்றது.

இன்று கோதண்டம் அவர்களை சுகாதார அமைச்சர் சாதிக் பாட்சா, எதிர்க் கட்சித் தலைவர் கருத்திருமன், மற்றும் கழகத் தோழர்கள் பலர் பார்த்துச் சென்றனர்.

வீரபாண்டி சட்டமன்ற உறுப்பினர் ஆறுமுகம், அறுவைச் சிகிச்சையின்போது உடனிருந்தார்.

சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தல் பணிக் குழு

மாநகராட்சி மன்றத் தேர்தலில் ஆங்காங்கு கழக அமைப்புகளும், வேட்பாளர்களும் ஏற்பாடு செய்யும் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களை உடனிருந்து நடத்திக் கொடுக்கவும், சொற்பொழிவாளர்களோடு தொடர்பு கொண்டு அவர்கள் கலந்துகொள்ளும் கூட்டங்களுக்காக நாள் — இடம் — நேரம் ஆகியவைகளை முறைப்படுத்தவும் கீழ்க்கண்டவாறு தேர்தல் பணிக் குழு அமைக்கப்படுகிறது :—

தலைவர் : காஞ்சி மணிமொழியார்

செயலாளர் : நீலநாராயணன்

1 முதல் 60 வட்டங்கள் வரை உள்ள வட சென்னைப் பகுதிக்கான தேர்தல் பணிக் குழு உறுப்பினர்கள் :—

1) மு. வேதாசலம் எம்.எல்.ஏ.
2) எம். ஆர். கண்ணன் எம்.எல்.ஏ.
3) ஆர். எல். லிங்கராஜ்
4) ந. இராமதாசு
5) மு. மாசிலாமணி
6) கு. மா. மாசிலாமணி
7) பி. கே. மாரியப்பன்

61 முதல் 120 வட்டங்கள் வரை தென் சென்னைத் தேர்தல் பணிக் குழு உறுப்பினர்கள் :—

1) அ. பொ. அரசு எம்.எல்.ஏ.
2) எம். கோபால் எம்.எல் ஏ.
3) அலமேலு அப்பாதுரை எம்.எல்.சி.
4) ஜார்ஜ் கோமகன்
5) ஒ. எஸ். பாலசுந்தரம்
6) சி. ஆர். கோலப்பா
7) ஏ. எஸ். இராமன்

குறிப்பு : தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் கலந்துகொள்ளும் சொற்பொழிவாளர்கள், இதற்கு முன்பே கூட்டத்திற்கான ஒப்புதல் கொடுத்திருந்தாலும் இனி கொடுப்பதாக இருந்தாலும் அந்த விவரத்தைத் தேர்தல் பணிக் குழுத் தலைவர், செயலாளர் அல்லது குழு உறுப்பினர்களிடம் 'அறிவகம்' —'அன்பகம்' மூலமாக அறிவித்துத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பிரச்சாரக் கூட்டம் ஏற்பாடு செய்திருப்பவர்களும், இனி செய்ய இருப்பவர்களும் மேற்கண்டவாறே தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

11--10--68

சென்னை 28-வது வட்டம்

தி. மு. கழக வேட்பாளர் என். வி. என். சோமு பி.ஏ., பி.எல். அவர்களை ஆதரித்து இரவு 8-மணிக்கு கொண்டித் தோப்பு வெங்கடராமையர் தெருவில்; ம. ரா. ஏழுமலை தலைமையில்; அமைச்சர் மு. கருணாநிதி பிரசாரத்தைத் துவக்கிவைப்பார்; பேசுவோர்: நீலநாராயணன், எம். ஆர். கண்ணன், எச். வி. ஹண்டே, ஏ. கே. ஏ. அப்துஸ் சமது, பேராசிரியர் க. அறிவழகன், வி. என். நரசிம்மன், ப. இளங்கோ, சு. மணிமொழியன், சை. காதர் பாட்சா, சி. அ. இரத்தினம், மற்றும் பலர்.

தோப்புத்துறை

கலைஞர் படிப்பகத்தின் சார்பில் மாலை 6-30 மணிக்கு கடைத் தெரு அருகில்; தலைவர்; எம். மீரா உசேன்; பேசுவோர்: ந. தர்மலிங்கம் எம். எல். ஏ., மா. மீனாட்சிசுந்தரம், செ. யூசுப், கருணை கமால், வே. கோதண்டபாணி. (முருகு பாண்டியனின் பலகுரல் கலை நிகழ்ச்சியும் நடைபெறும்.)

சத்திரக்குடி

தி மு.க. சார்பில் மாலை 6-30 மணிக்கு சேதுபதி விவேகானந்தபுரம் வள்ளுவர் திடலில்; தலைவர்: சுப. சாத்தையா; பேசுவோர்: ஆ. திராவிடமணி, டி. கே. சிறைமீட்டான், சுப. தங்கவேலன், தமிழ்க் குடிமகன், அ. வே. அரவரசன், கு. இரத்தினசாமி.

பெருமாநல்லூர்

தி. மு. க. சார்பில் மாலை 7 மணிக்கு; தலைவர்: சு. அப்புக்குட்டி; பேசுவோர்: மு. இராமநாதன், சு. துரைசாமி எம்.எல்.ஏ, இரா. முருகேசன், சோ.கு. பழனிச்சாமி, சி. முத்துக்குமரசாமி, அரங்சராமசாமி, க. சுந்தரம்.

12--10--68

அக்ராபாளையம்

தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு; தலைவர்: து. முருகேசன்; பேசுவோர்: புலவர் க. கோவிந்தன் (சட்டமன்றத் துணைத் தலைவர்), கோ. விசுவநாதன் எம்.பி., ஏ. சி. நரசிம்மன் எம்.எல்.ஏ., செயராமன், ஆர். என். வீரபத்திரன், எம். கே. ஏழுமலை, மு. ந. இராமன், மற்றும் பலர். (இரவு 10 மணிக்கு அண்ணா உருவப் பட ஊர்வலம்)

ஆதனூர்

தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு ஈசுவரன் கோவில் திடலில்; தலைவர்: ந. கந்தசாமி; பேசுவோர்: புலவர் க. கோவிந்தன், ஏ. சி. நரசிம்மன் எம்.எல்.ஏ., கோ. விசுவநாதன் எம்.பி., எம். கே. ஏழுமலை, ஆர். என். வீரபத்திரன், தோப்பூர் திருவேங்கடம், மு. க. இராமன், க. பஞ்சாட்சரம்.

புதுக்கோட்டை

20-வது வட்ட தி.மு.க. சார்பில் மாலை 6-30 மணிக்கு சாந்நாதபுரம் இரண்டாவது தெரு வல்லத்தரசு திடலில்; தலைவர்: எஸ். ஏ. ஆதிமூலம்; பேசுவோர்: இரா. வெற்றிகொண்டான், பொ. முத்துக் கலிங்கன், அ. பெரியண்ணன், எம். எஸ். அப்துல் மஜீத், அ. மாணிக்கம் எம்.சி., எஸ். அரங்கசாமி எம்.சி.

தஞ்சை

நகர தி.மு.க. சார்பில் மாலை 6-30 மணிக்கு திலகர் திடலில்; தலைவர்: மன்னை ப. நாராயணசாமி; பேசுவோர்: பொதுப்பணி அமைச்சர் மு. கருணாநிதி, எஸ். நடராசன் எம்.சி., எஸ் பெத்தண்ணன் எம்.சி., பி. மாணிக்கவாசகம், ஏ.வி. பதி, ஒய். சேவியர், பி.எஸ். தங்கமுத்து, கு. சுல்தான் எம்.சி., டி. கே. கோவிந்தன் எம்.சி., டி. பி. கண்ணன்.

சென்னை 114வதுவட்ட தேர்தல் அலுவலகத் திறப்பு

சென்னை 114-வது வட்ட தி. மு. கழக தேர்தல் அலுவலகத் திறப்பு விழா 11-10-68 மாலை 6 மணிக்கு கோடம்பாக்கம் ஸ்டேஷன் வியூ ரோடில் நடைபெறும்; தலைவர்: காஞ்சி மணிமொழியார்; திறப்பாளர்: சிட்டிபாபு எம்.பி.; கொடியேற்றுபவர்: கா. வேழவேந்தன் எம்.எல்.ஏ.; பேசுவோர்: ஏ. எஸ். இராமன் எம்.சி., மா. செங்குட்டுவன், செ. கண்ணப்பன், சாமிநாதன், இளமாறன், பி. ஏ. கணபதி, இரா. ஆனந்தன், சங்கரலிங்கம், மற்றும் பலர்.

சென்னை 30-வது வட்ட தேர்தல் அலுவலகத் திறப்பு

சென்னை 30-வது வட்ட தி.மு.க. தேர்தல் அலுவலகத் திறப்பு விழா 11—10—68 மாலை 6-மணிக்கு பெருமாள்கோவில் தோட்டம் 1-வது சந்தில் நடைபெறும்; தலைவர்: எம். ஆர். கண்ணன் எம்.எல்.ஏ; திறப்பாளர்: என்.வி. நடராசன் எம்.எல்.சி.

சலவைத் தொழிலாளர்கட்கு வேண்டுகோள்

"தமிழ்நாடு சலவைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்க அலுவலகத்தில், (38, பிள்ளையார் கோயில் தெரு, சேத்துப்பட்டு) 12—10—68 இரவு 8-மணிக்கு, சலவைத் தொழிலாளர்கள் கூட்டம் நடைபெறும்; அதுபோது மாநகராட்சித் தேர்தலில் தி. மு. கழகத்துக்கு ஆதரவளிப்பது பற்றி ஆலோசிக்கப்படும். சலவைத் தொழிலாளர் அனைவரும் கலந்துகொள்ள வேண்டுகிறேன்"

என, மேற்படி சங்கப் பொதுச் செயலாளர் சி. ஆர். கோலப்பா அறிவிக்கிறார்.

இளங்கோவன் --- பூங்கோதை கலை நிகழ்ச்சி

கழகப் பிரசாரக் கலைநிகழ்ச்சி நடத்தும் புதுக்கோட்டை இளங்கோவன்—பூங்கோதை குழுவினர் தற்போது சென்னையில் தங்கியிருப்பதால், மாநகராட்சித் தேர்தல் பிரசாரக் கலை நிகழ்ச்சி நடத்த விரும்புவோர் கீழ்க்காணும் முகவரியில் தொடர்புகொள்க :—

இளங்கோவன் -- பூங்கோதை கலைக்குழு, கோல்டன் லாட்ஜ், 26, திப்பு சாகிப் தெரு, மவுண்ட் ரோடு, சென்னை-2.

வேலைநீக்கம் செய்யப்பட்ட....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சினைகளைப்பற்றி அமைச்சரவை இன்று பரிசீலித்தது.

"இந்தச் சூழ்நிலையில் அரசின் கண்டிப்பான போக்கைத் தளர்த்தக்கூடாது" என்பது அமைச்சரவையின் பொதுப் படையான கருத்தாகும்.

வேலைநிறுத்தம் செய்த ஊழியர்களிடம் தாராளமாக நடந்துகொள்வதற்கும் அமைச்சரவையில் எதிர்ப்புக் காணப்பட்டது; 'அவர்களுக்கு ஏதாவது தண்டனை விதிக்கப்பட வேண்டும்' என்றும் கருத்து நிலவியது.

"ஒரு மாத நோட்டீசுக்குப் பதிலாகச் சம்பளம் அளித்து வேலையிலிருந்து நீக்கப்பட்டவர்கள் மீண்டும் நியமிக்கப்படக் கூடாது" என்பதே அமைச்சரவையின் பொதுக் கருத்தாகும்.

21,000 தற்காலிக ஊழியர்களுக்கு ஏற்கனவே ஒரு மாத நோட்டீசு கொடுக்கப்பட்டிருக்கிறது; 40,000-பேர் சம்பளம் அளிக்கப்பட்டு வேலையிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.